## வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2023

தரம் - 6 வரலாறு 1052 நேரம் :- 2மணி

சுட்டெண்:-

### பகுதி - I

❖ தரப்பட்டவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கீழ்க்கோடிடுக.

01. மகாநாமதேரரால் எழுதப்பட்ட வரலாற்று நூல் எது?
1) தீபவம்சம் 2) தாதுவம்சம் 3) சூழவம்சம் 4) மகாவம்சம்

02. தொல்பொருள் மூலாதாரங்களுள் உள்ளடங்குவது.
1) கர்ணபரம்பரைக்கதைகள் 2) பழைய நூலகள்
3) எலும்புக்கூடுகள் 4) உள்நாட்டு இலக்கியங்கள்

03. சாகர்கள் தோற்கடிக்கப்பட்ட நினைவாக எழுந்த நாட்காட்டி.
1) புத்தவருடம் 2) சாலிவாகன சகாப்தம்
3) ஹிஜ்ரி ஆண்டு 4) கிறிஸ்து வருடம்

04. புத்தர் பரிநிர்வாணமடைந்த வருடமாக கணிக்கப்படுவது.
1) கி.மு 817 2) கி.மு 544 3) கி.மு 296 4) கி.மு 554

05. தற்கால மனித இனம் பின்வருவனவற்றுள் எது?
1) ஹோமோ சேப்பியன் 2) ஹோமோ நியண்டதலெனசில்
3) ஹோமோ ஹபிலஸ் 4) ஒஸ்ரலோபிதிகஸ்

06. உலகில் முதன் முதல் சோளம் பயிரிடப்பட்ட பிரதேசம்.
1) மத்தியதரைக்கடல் 2) மத்தியமெக்சிக்கோ
2) சீனா 4) ஆபிரிக்கா

07. மொசப்பதேமிய நாகரிகத்தில் காற்றுக்கும் விவசாயத்துக்கும் அதிபதி.
1) என்கிகி 2) என்லிலி 3) அனு 4) சிகுராத்

08. உலகிற்குக் கிடைத்த சிறந்த கொடையான பிரமிட்டை உருவாக்கிய நாகரிகத்தவர்.
1) மாயா நாகரிகம் 2) எகிப்திய நாகரிகம்
3) சிந்து நதி நாகரிகம் 4) மொசப்த்தேமிய நாகரிகம்

09. விஜயன் குழுவினர் இலங்கையில் வந்து இறங்கிய இடம்.
1) கோகண்ண 2) மாந்தை 3) ஜம்புகோளப் பட்டினம் 4) தம்பபன்னி



kalvi.lk

10. இலங்கையில் பிக்குனி சாசனத்திற்கு காரணமான பெண்.
1) சங்கமித்தை 2) அனுலாதேவி 3) குவேனி 4) சித்திரபா

11. பண்டுகாபய மன்னனால் அநுராதபுர நகரில் கட்டப்பட்ட முதலாவது குளம்.
1) அபயவாவி 2) மின்னேரியாக் குளம்
3) பராக்கிரம சமுத்திரம் 4) கலாவாவி

12. விஜயன் குழுவினர் தமது குடியிருப்புக்களை அமைத்த நதிக்கரைகள் எவை.
1) கலா ஓயா, வளவை கங்கை 2) மல்வத்து ஓயா, கிரிந்தி ஓயா
3) மல்வத் ஓயா, கலா ஓயா 4) கலா ஓயா, வளவை கங்கை

13. இலங்கையில் புத்த சமயத்தை தழுவிய முதலாவது மன்னனாக திகழ்பவன்.
1)பண்டுகாபயன் 2)முடசிவன் 3)தேவநம்பியதீசன் 4)துட்டகைமுனு

14. அநுராதபுரத்தை எல்லாளன் ஆட்சிபுரிந்த காலங்களின் எண்ணிக்கை.
1) 77 வருடங்கள் 2) 54 வருடங்கள் 3) 44 வருடங்கள் 4) 22 வருடங்கள்

15. இந்தியாவின் ராமகாம தூபியில் வைக்கப்பட்டு இருந்த புத்தர் பெருமானின் சரீரத்தாது பின்னர் இலங்கையில் வைக்கப்பட்ட தூபியாக திகழ்வது.
1) தூபராம தூபி 2) ஜேத்தவன ராம
3) அபயகிரிவிகாரை 4) ருவன் வெலிசாயா

16. அபயகிரி விகாரையை குப்பிகலதிஸ்ஸ தேரருக்கு அன்பளிப்பு செய்த மன்னன்.
1) தாதுசேனன் 2) மகாசேனன் 3)வலகம்பாகு 4) வசபன்

17. திரிபீடகம் நூல்வடிவம் பெற்ற இடமாக திகழ்வது.
1) தம்புள்ளை விகாரை 2) கண்டி தலாத மாளிகை
3) மாத்தளை அலுவிகாரை 4) அநுராதபுரம் ருவன் வெலிசாயா

18. இசிகிரிய என்ற அமைச்சரால் யாழ்ப்பாண பிரதேசத்தில் கட்டப்பட்ட விகாரையின் பெயர்.
1) பியங்கு திஸ்ஸ விகாரை 2) தூபராம விகாரை
3) நாகவிகாரை 4) மகாவிகாரை

19. தாதுசேன மன்னனின் அரச வம்சம்.
1) இலம்பகர்ண வம்சம் 2) மௌரிய வம்சம்
3) கலிங்க வம்சம் 4) நாயக்கர் வம்சம்

20. மின்னேரியாத் தெய்வம் எனப் போற்றப்படும் மன்னனின் பெயர்.
1) வலகம்பா 2) தேவநம்பியதீசன்
3) மகாசேனன் 4) வசபன்

(20×2= 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி – II

❖ **முதலாம் வினா உட்பட மொத்தமாக 5 வினாக்களுக்கு விடை தருக.**

01. பின்வரும் இலங்கைப் படத்தில் தரப்பட்ட எழுத்துக்கள் குறிக்கும் இடங்களைத் தருக.

**அ)**

i). A என்ற நதி

---------------------------------

ii). B என்ற நதி

---------------------------------

iii). C என்ற இராசதானி

---------------------------------

iv). D என்ற நதி


---------------------------------

v). E என்ற இடம்


---------------------------------

vi). F என்ற இடம்

---------------------------------




**ஆ)** பின்வரும் உலகப்படத்தில் தரப்பட்ட எழுத்துக்கள் குறிக்கும் இடங்களைத் தருக.




i). A என்ற நாகரிகம்

---------------------------------

ii). B என்ற கண்டம்

---------------------------------

iii). C என்ற நாகரிகம்

---------------------------------

iv). D என்ற நாகரிகம்

---------------------------------

v). E என்ற நாடு

---------------------------------

vi). F என்ற கண்டம்

---------------------------------



kalvi.lk

02.

(I) வரலாறு என்றால் என்ன?
(II) வரலாற்றுக் காலத்தை அளவீடு செய்ய பயன்படுத்தப்படும் முறைகள் 4 தருக?
(III) புதிய கற்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களை குறிப்பிடுக?

( 3+4+5=12)

03.

(I) உலகில் நிலவிய புராதன நாகரிகங்கள் 3 தருக?
(II) மொசப்பத்தேமிய சமூகத்தின் நான்கு இனப்பிரிவுகளும் யாவை?
(III) (A)சிந்துநதி நாகரிகத்தில் காணப்பட்ட பிரதான நகரங்கள் 3 தருக?
(B)எகிப்திய நாகரிகத்தின் மூலம் உலகிற்கு கிடைத்த கொடைகள் 2 தருக?

( 3+4+5=12)

04.

(I) கற்கால மனிதர்கள் உட்கொண்ட உணவுகள் 3 தருக?
(II) இறந்தவர்களுக்கு கற்காலத்தில் மேற்கொண்ட மரணச் சடங்குகள் 2 தருக?
(III) கற்கால மனிதர்களின் வாழ்க்கை முறைகள் 5 தருக?

( 3+4+5=12)

05.

(I) விஜயன் இலங்கைக்கு வரும் பொழுது இங்கு வாழ்ந்த மக்கள் குழுவினர் யார்?
(II) விஜயனுடன் வருகை தந்த குழுவினர் முதன் முதலில் எந்த நதிக்கரைகளை அண்டியதாக குடியேறினார்கள்?
(III) பண்டுகாபயன் அனுராதபுரத்தை நிர்மாணித்த விதம் பற்றி குறிப்பிடுக.

( 3+4+5=12)

06.

(I) துட்டகைமுனு மன்னனால் அமைக்கப்பட்ட விகாரைகள் மூன்றைத் தருக?
(II) வசபமன்னன் அமைத்த மூன்று குளங்களையும், ஒரு கால்வாயையும் தருக?
(III) மகாசேன மன்னன் அல்லது தாதுசேன மன்னன் பெறும் முக்கியத்துவம் பற்றி 5 வசனம் எழுது?

( 3+4+5=12)



kalvi.lk

# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# MATHS

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.



- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
| --- | --- |
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page